# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **47/ந/2019**

நாள் : **26/09/2019**

**திரு K. தமிழ்செல்வகுமார்,**
**கிழவி குளம்,**
**விருதுநகர் மாவட்டம்.** — **முறையீட்டு மனுதாரர்**

**திரு P. இராஜேந்திரன்,**
**உதவியாளர்,**
**இராஜபாளையம் நகராட்சி,**
**இராஜபாளையம்.** — **எதிர் மனுதாரர்**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், கிழவிகுளம், 39– கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு K. தமிழ்செல்வகுமார் அவர்களின் 10.03.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 47/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், கிழவிகுளம், 39– கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு K. தமிழ்செல்வகுமார் என்பவர், இராஜபாளையம் நகராட்சியில் உதவியாளராகப் பணிபுரியும் திரு P. இராஜேந்திரன் குறித்து கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்:-

(1) பொறியாளர் பிரிவில் உதவியாளராகப் பணிபுரியும் எதிர்மனுதாரர் தீர்வை சம்பந்தமாக மக்களிடம் பஞ்சாயத்தில் ஈடுபட்டு ஆயிரக்கணக்கில் கையூட்டு கோருவது ;

(2) கோடிக் கணக்கான சொத்துக்கள் தன் பெயரிலும் தனது உறவினர்கள் பெயரிலும் சேர்த்துள்ளது ;

(3) 20 ஆண்டுகளாக தொடர்ந்து இராஜபாளையம் நகராட்சியில் பணியாற்றி வருவது ;

மேற்குறிப்பிட்ட புகார்கள் அடங்கிய மனுவின் நகல்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் உட்பட தமிழக அரசின் உயர் அலுவலர்களுக்கும் அனுப்பப் பட்டுள்ளன.

2. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் குறித்து எதிர்மனுதாரரான நகராட்சி உதவியாளர் திரு P. இராஜேந்திரன் தனது தன்னிலை விளக்கத்தினை அளித்துள்ளார். தான் 19.11.2018 முதல் பொறியியல் பிரிவின் இ1 இருக்கை உதவியாளராகப் பணிபுரிவதாகவும், தான்

பொறுப்பேற்ற சில தினங்களே ஆன நிலையில் 10.12.2018 அன்று ஒப்பந்ததாரரான மனுதாரர் அவருக்கு வழங்கப்படவேண்டிய முன்வைப்புத் தொகை திரும்ப வழங்குதல் சம்பந்தமாக அலுவலக பணி நேரத்தில் தன்னை பணி செய்ய விடாமல், தடுத்து தகராறு செய்ததாகவும் இது சம்பந்தமாக நகராட்சிப் பொறியாளர் மற்றும் இராஜபாளையம் நகராட்சி ஒப்பந்ததாரர்கள் சங்கத் தலைவர் ஆகியோரிடமும் புகார் செய்ததாகவும் தன்னை களங்கப்படுத்தி மன உளைச்சல் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு பொய்யானவற்றை புனைந்து புகார் தெரிவித்துள்ளார் என்று தனது தன்னிலை விளக்கத்தில் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 24.04.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்களை உறுதி செய்ததுடன் எதிர்மனுதாரர் கூட்டுறவு வங்கியில் வைப்புநிதியில் ரூ.5 லட்சம் வைப்புத் தொகை வைத்துள்ளதாகவும், கோவிலுக்கு நிதி உதவியாக ரூ. 5 லட்சம் வழங்கியுள்ளார் என்றும் தெரிவித்தார். மேலும், பினாமி பெயரில் உள்ள சொத்துக்களுக்கு ஆதார ஆவணங்களை 10 நாட்களில் சமர்ப்பிப்பதாகவும் விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் தெரிவித்தார். மேற்குறிப்பிட்ட விசாரணையை தொடர்ந்து, தனது 06.05.2019 நாளிட்ட கடிதத்தில் தான் வழங்கியுள்ள சொத்துப் பட்டியலுக்கான ஆதார ஆவணங்களை இராஜபாளையம் பத்திரப் பதிவு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

4. முறையீட்டு மனுதாரரின் புகார்கள் குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கையும் கோரப்பட்டது. அதன்படி பொறுப்பு ஆணையாளரான நகராட்சிப் பொறியாளர் தனது 19.07.2019 நாளிட்ட கடிதம் எண்.5469/சி1/2019–இல் தனது அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். முறையீட்டு மனுதாரரால் முன்விரோதத்தின் அடிப்படையில் உள்நோக்கத்தோடும், காழ்ப்புணர்ச்சியோடும் எதிர்மனுதாரரான நகராட்சி உதவியாளர் திரு P. இராஜேந்திரன் அவர்கள் மீது ஆதாரமற்ற புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றும், அப்புகார்களின் அடிப்படையில் மேல்நடவடிக்கை மேற்கொள்ள முகாந்திரம் எதுவும் இல்லை என்று விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. எதிர்மனுதாரரான நகராட்சி உதவியாளர் திரு P. இராஜேந்திரன் பொதுமக்களிடம் கையூட்டு பெற்றது மற்றும் முறையீட்டு மனுதாரர் சமர்ப்பித்துள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சில சொத்துக்களுக்கான ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறியதால் அப்புகார்கள் உறுதி செய்யப்படவில்லை எனவும், இராஜபாளையம் நகராட்சி உயர்தர அலுவலர்களின் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தில் எதிர் மனுதாரரான P. இராஜேந்திரன் பெயரில் வைப்புத் தொகை எதுவும் இல்லை என அச்சங்கத்தின் செயலாளர் சான்று அளித்துள்ள நிலையில் அக்குற்றச்சாட்டுகள் நிரூபணம் ஆகவில்லை எனவும், மேலும், கோவிலுக்கு ரூ.5 லட்சம் நிதி உதவி வழங்கியது குறித்தும் முறையீட்டு மனுதாரர் எந்த ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படாத நிலையில் அக்குற்றச்சாட்டும் நிரூபணம் ஆகவில்லை எனவும் தெரிவித்து முன்விரோதத்தின் அடிப்படையில் காழ்ப்புணர்ச்சியோடு, உள்நோக்கத்தோடு தெரிவிக்கப்பட்ட புகார்கள் மீது மேல் நடவடிக்கை தொடர எந்தவித முகாந்திரமும் இல்லை என விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. எதிர் மனுதாரர் திரு P.இராஜேந்திரன் அவர்களிடமும் 21.08.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. ஒப்பந்ததாரரும் முறையீட்டு மனுதாரருமான திரு தமிழ்செல்வகுமார் வழங்கக் கோரிய முன்பணம் சம்பந்தமாக ஏற்பட்ட தகராறு, அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகள் மற்றும் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே தன் மீதான புகார்கள்

தெரிவிக்கப்பட்டுள்ளன என விசாரணையின் போது விளக்கமாகத் தெரிவித்தார். மேலும், பினாமி பெயரில் சொத்துக்கள் எதுவும் இல்லை என்றும், தனது மனைவி பெயரில் மட்டும் பாகப்பிரிவினை மூலம் 2013–ஆம் ஆண்டு பெறப்பட்ட சொத்தும், அவரது சம்பாத்தியத்தில் 2015–ஆம் ஆண்டு வாங்கப்பட்ட 460 சதுரடி நிலம் மற்றும் அதில் கட்டடம் மட்டும் உள்ளது என்று விசாரணையின் போது உறுதி செய்தார். எனவே, முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள புகார்கள் உண்மையல்ல என்றும் தெரிவித்தார். மேலும், 1999–இல் இராஜபாளையம் நகராட்சியில் தட்டச்சராகப் பணியில் சேர்ந்த தான் 2013–ஆம் ஆண்டு பதவு உயர்வு பெற்று வேறு நகராட்சிகளில் பணியாற்றி 2016 மே முதல் தொடர்ந்து இராஜபாளையம் நகராட்சியில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார்.

7. இந்நேர்வில், முறையீட்டு மனுதாரர் தான் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதார ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை. எனவே, எதிர்மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு உரிய ஆதார ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில், நகராட்சி ஆணையாளர் அறிக்கையினை ஏற்று இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக்கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

1·10·19

பெறுநர்

1. திரு V.K. தமிழ் செல்வக்குமார்,
39, கிளவி குளம் அஞ்சல்,
இராஜபாளையம் வட்டம்,
விருதுநகர் மாவட்டம்

2. நகராட்சி ஆணையர்,
இராஜபாளையம் நகராட்சி,
இராஜபாளையம்,
விருதுநகர் மாவட்டம்.

3. திரு P. இராஜேந்திரன்,
உதவியாளர்,
இராஜபாளையம் நகராட்சி,
இராஜபாளையம்,
விருதுநகர் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி